## தேசிய வடிவமைப்பு நிலையம் - 2019

------------------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிலையத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 13 (அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் ஒரு அறிக்கையிடல் காலப்பகுதிக்கு மேற்பட்ட காலப்பகுதியில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மே மாதம் அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த ரூபா 60,117,201 கூட்டுப்பெறுமதியான நடைமுறை வேலைகள் நிதி நிலைமைக்கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக காண்பிக்கப்பட்டிருந்தன. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிற்போடப்பட்ட வருமானமாக ரூபா 6,253,123 தொகை மீளாய்வாண்டின் போது நிதிச் செயலாற்றல் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் அதற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட கணனிகளின் கிரயப் பெறுமதி சொத்துக்கள் விற்பனைக் கணக்கிற்கு மாற்றும் போது அதன் பெறுமதி ரூபா 67,137 குறைத்து மாற்றப்பட்டிருந்ததுடன் அகற்றப்பட்ட கணனிகளுக்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கமும் ரூபா 387,357 குறைத்து பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கிலிருந்து சொத்துக்கள் விற்பனை கணக்கிற்கு | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | அகற்றப்பட்ட சொத்துக்களுக்குரிய சரியான கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் என்பவற்றை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சொத்துக்கள் விற்பனை நட்டம் ரூபா 320,220 ஆல் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் கணனிகளுக்கு பெறுமானத்தேய்வு கணக்கிடும் போது அப்பெறுமதி ரூபா 60,720 குறைத்து கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுமானத்தேய்வு ஒதுக்கம் சரியாக கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

1.5.5 **இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| நிலையான சொத்துக்கள் | 94,611,771 | 76,233,036 | 18,378,735 | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக இருந்து வரும் இவ்வேறுபாடு சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்து கணக்குகள் சீராக்கப்பட வேண்டும். |

**1.5.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் | 7,424,463 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறவேண்டிய மீதிகளை உறுதிப் படுத்தும் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 7,328,155 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப் படுத்தும் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள்<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br><br>நிதிப்பிரமாணம் 1640(ii) மற்றும் 1642 | முன்னால் தலைவரால் பயன்படுத்தப்பட்ட அவரின் உத்தியோக பூர்வ வாகனத்தை உத்தியோகத்தர் வெளிநாடு சென்றிருக்கும் போது அவரின் மகனால் பயன்படுத்தப்பட்டு திடீர் விபத்திற்கு உட்பட்டிருந்தமையால் வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக பொலிசில் முறைப்பாடு செய்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் அதற்குரிய கோவைகளை பராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | தலைவர் வெளிநாடு சென்றிருந்த போது வண்டியை தலைவரின் மகன் கராஜிலிருந்து வெளியே எடுக்கும் போது விபத்திற்கு உட்பட்டிருந்தது. திடீர் விபத்து தொடர்பாக முன்னால் தலைவரால் நிறுவனத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கவில்லை. ஆதலால் பொலிசில் முறைப்பாடு செய்வதற்கோ அல்லது காப்புறுதி இழப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமை காணப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் திடீர் விபத்து தொடர்பாக செயற்படுவதற்கும் திடீர் விபத்திற்காக கோவையொன்றைபராமரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XII மற்றும் XV ஆம் அத்தியாயம் | உத்தியோகத்தரொருவர் சுற்றுலாவொன்றிற்காக வெளிநாடு செல்வதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் லீவு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் நிலையத்தின் முன்னால் தலைவர் தனிப்பட்ட சுற்றுலா ஒன்றிற்கு வெளிநாடு செல்வதற்கு 02 நாட்களுக்கு முன்னர் லீவு விண்ணப்படிவத்தை | லீவு விண்ணப்பத்தை 02 மாதங்களுக்கு முன் சமர்ப்பிக்க முடியவில்லை. இதனால் பிரதம மந்திரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் வெளிநாடு செல்வதற்கு முன்னர் லீவு அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பித்திருந்ததுடன் நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு பிரதமமந்திரியின் அங்காரமும் பெறப்பட்டிருக்கவில்லை | | |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை யின் 6.5.1 ஆம் பிரிவு | வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்கு முடிவடை வதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | இச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2003 ஒக்தோபர் 28 ஆந் திகதிய பீஈடீ 17 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வெளிநாட்டு சுற்றுலா வொன்றிற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்ப டாமல் மேற்டுகொள்ளப்பட்ட வெளிநாட்டு சுற்றுலா ஒன்றிற்காக ரூபா 179,800 கூட்டுத் தொகையான விமான பிரயாணச் சீட்டு, காப்புறுதி கட்டணங்கள், அமையப் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | அமைச்சினால் குறித்த அங்கீகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வெளிநாட்டு பிரயயாணத்திற்கு பங்குபெறச் செய்யப்பட்டிருந்தது. | இச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2019 ஏப்ரல் 02 ஆந் திகதிய MIC/HR/01/2019 ஆம் இலக்க வரிசை அமைச்சின் சுற்றறிக்கை | முன் அங்கீகாரமொன்று இல்லாமல் தனிப்பட்ட அல்லது கடமை களுக்காக நாட்டிலிருந்து வெளியேறக் கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளாமல் 2019 ஏப்ரல் 20 ஆந் திகதி முதல் 2019 மே 04 ஆந் திகதி வரை 14 நாள் காலப்பகுதியில் முன்னால் தலைவர் வெளிநாடு சென்றிருந்தார். | அவசர தேவைப்பாடொன்றின் பேரில் லீவு கோர முடியாமல் இருந்ததுடன் மிகவும் அவசரமான தவிர்க்க முடியாத காரணமொன்றின் பேரில் வெளிநாடு சென்றிருந்தார். | இச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு லீவினை அங்கீகரித்துக் கொண்டு வெளிநாடு செல்லல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 65,961 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 7,002,071 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,936,110 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு மொத்த வருமானம் ரூபா 4,674,346 ஆல் குறைவடைந்திருக்கையில் திரட்டிய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 11,642,296 ஆல் குறைவடைந்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையத்தினால் மொறட்டுவ நகர சபைக்கு 2004 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளுக்குரியதாக செலுத்த வேண்டிய நிலுவை வீதவரி மற்றும் மிகை கட்டணங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 352,239 ஆக இருந்தது. வருடக் கணக்காக நிலவி வரும் இந்நிலுவை கடன் மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவை 2004 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதிக்குரியதாகும். குறித்த நிலுவை பணம் காணப்படும் சிக்கல்கள் தீர்வு செய்யப்படும் வரை நிறுவனத்தினால் கொடுப்பனவு செய்யப்படவில்லை. | நிலுவை பணத்தை மிகை கட்டணமொன்று இல்லாமல் தீர்வு செய்வதற்கும், அவ்வாறு செலுத்தி கழிவு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தலைமை அலுவலகத்தின் நிர்மாண வேலைகள் கணக்காய்வு செய்யப்பட்ட 2020 மே 30 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு பூர்த்தி செய்யப்படாமை காரணமாக, நிலையத்தின் கல்விப் பிரிவினை நடாத்திச் செல்வதற்கு மாதமொன்றிற்கு ரூபா 84,975 தொகையான வாடகை அடிப்படையில் கட்டிடமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக 2019 ஆம் ஆண்டிற்காக மொத்தம் ரூபா 1,019,700 தொகையும் 2020 ஆம் ஆண்டினுள் ரூபா 339,900 தொகையும் வாடகையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிர்மாண நடவடிக்கைககள் தாமதமானமையால் வாடகை உடன்படிக்கையை அவ்வப்போது நீடிப்பதற்கு நேர்ந்தது. தலைமை அலுவலகத்தின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படும் வரையில் பயிற்சி பிரிவினை வாடகை கட்டிடத்திலிருந்து அகற்ற முடியாமல் இருந்தது. மாதமொன்றுக்கு ரூபா 85,000 வீதம் வாடகை கட்டிடத்தை தொடர்ந்தும் பெற்றுக்கொள்ள இணக்கம் காணப்பட்டதுடன் புதிய கட்டிடத்தை பாவனைக்கு எடுத்து விரிவுரைகள் நடாத்தப்பட்ட கட்டிடத்தில் விரிவுரைகளை நடாத்துவதற்கு பொருத்தமான நிலைமையொன்று வரும் வரை வாடகை கட்டிடத்தை பயன்படுத்த நேர்ந்துள்ளது. நேர்ந்தது. | புதிய கட்டிடத்தில் அலுவலகத்தை நிறுவி வாடகை கட்டிடத்தை மீள ஒப்படைப்பதற்கும் வாடகை செலவினத்தை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிலையத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இலக்கம் 10, த மெல் வீதி, கட்டுபெத்த என்ற முகவரியில் உள்ள காணியின் இடத்தை கையேற்காமல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 60,117,201 தொகை செலவிடப்பட்டு புதிய இரண்டு மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடத்தின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் காற்றுச்சீராக்கி பொருத்தப்படாமையால் அதனை 2020 மே மாதம் வரை செயற்திறனான செயற்பாடுகளுக்கு பயன்படுத்த முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இக்காணி வரிசை அமைச்சின் ஈடுபாட்டுடன் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிர்மாணத்தை மேற்கொள்ள முன்னர் காணியை சட்டரீதியாக பொறுப்பேற்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் துணி வகைகள், லெதர் மற்றும் ரெக்ஷீன் பாடநெறிகளை பூர்த்தி செய்த வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் பயிலுனர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 199 தையல் இயந்திரங்கள் 2018 ஏப்ரல் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் இத்தையல் இயந்திரங்களில் 101 இயந்திரங்களை பயிலுனர்களுக்கு பகிர்ந்தளித்தல் 2019 செப்தம்பர் 20 ஆந் திகதி வரை தாமதமாக மேற்கொண்டிருந்ததுடன் எஞ்சிய 98 தையல் இயந்திரங்களையும் பகிர்ந்தளித்தல் 2020 பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதி வரை தாமதமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது | அமைச்சினூடாக தையல் இயந்திரங்கள் பகிர்ந்தளிப்பதற்காக திகதியை பெற்றுக்கொள்வதில் தாமதமானமையால் தையல் இயந்திரங்களை பகிர்ந்தளிக்க தாமதம் ஏற்பட்டது. | செயற்திட்டத்தின் கீழ் முன்னர் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் பயிற்சி முடிவடைந்தவுடன் தையல் இயந்திரங்களை பகிர்ந்தளித்திருக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையத்தின் பணிப்பாளர், இயக்குனர் சபையின் செயலாளராக செயற்பட்டிருந்ததுடன் 2019 மார்ச் 11 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான கணக்கு குழு கூட்டத்தின் போது 03 மாதங்களுக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் இப்பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. ஆலோசனை வழங்கப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2020 மே 30 ஆந் திகதி வரை அந்த ஆலோசனையின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு செய்யும் வரை வெளியிலிருந்து நபரொருவரின் சேவையை பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் மீதான கணக்கு குழு கூட்டத்தின் ஆலோசனையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிலையத்தினால் நடாத்திச் செல்லப்படும் டிப்ளோமா மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் நோக்கில் 2019 ஆம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 1,000,000 ஆக இருந்த போதும் ஆண்டில் ரூபா 528,000 ஆன தேறிய வருமானமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நோக்கத்தை அடைந்துகொள்ளலின் நிதி முன்னேற்றம் 53 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 70 மாணவர்களை அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் விரிவுரை மண்டபங்களில் இடவசதிகள் போதியளவில் இல்லாததன் பேரில் 60 மாணவர்கள் அனுமதிக்கப் பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | அடையக் கூடிய இலக்கை தீர்மானிப்பதற்கும் இலக்கின் பிரகாரம் பயிற்சி பாடநெறி களை நடாத்துவதற்கும் செயற்பட வேண்டும். |
| (இ) | வடிவமைப்பு மற்றும் பொருட்கள் உற்பத்தி மூலம் பொருட்கள் தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ளல் மற்றும் மூலப்பொருட்களுக்காக தரத்தை உறுதிப்படுத்தி சான்றிதழ் வழங்குதல் ஆகிய செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,040,000 ஆன மதிப்பீடு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளுக்கான செலவிடப்படட உண்மையான செலவினம் ரூபா 330,000 ஆக இருந்தது. இதன் பிரகாரம் அதன் நிதி முன்னேற்றம் 32 சதவீதமாக இருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதன் பௌதிக முன்னேற்றம் 33 சதவீதமாக இருந்தது. | இப் பிரிவில் சேவையாற்றிய உதவி பணிப்பாளர் (இயந்திரவில்) உத்தியோகத்தரின் ஒப்பந்த காலம் முடிவடைந்து அவர் விலகி சென்றமை, உதவிப் பணிப்பாளர் (இரசாயனம்) உத்தியோகத்தர் பிரசவ விடுமுறை பெற்றுக் கொண்டமையால் எதிர்பார்க்கப்பட இரண்டு ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்யமுடியாமல் போனது. | செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் நிறுவனத்தை உருவாக்கிய சட்டத்தில் கையளிக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு செயற்பட வேண்டும். |
| (ஈ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) நிதிப் பங்களிப்பின் கீழ் 2014 திசெம்பர் மாதம் முதல் 2016 திசெம்பர் மாதம் வரையான 02 வருட காலப்பகுதியில் கைப்பணியாளர்களின் தொழில்நுட்ப இயலுமை அபிவிருத்தி மற்றும் ஆலோசணை உதவி வழங்கும் செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு வரை இச்செயற்திட்டத்தின் காலம் | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டதின் மூலம் கைப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட தொழில்நுட்ப இயலுமை அபிவிருத்தி மற்றும் ஆலோசணை சேவைகளை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடிவடைந்து 03 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் அச்செயற்திட்டத்திற்காக கிடைத்த பணத்தை பயன்படுத்தி 2019 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 2,321,916 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு செயற்திறனாக ஈடுபடுத்தாமல் வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் விளைவற்ற வகையில் ரூபா 2,321,228 தொகை காணப்பட்டது. | | |

### 3.3 பெறுகை நடைமுறை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 (அ) பிரிவின் பிரகாரம் 2019 ஆகஸ்ட் மாதம் கண்டியில் நடாத்தப்பட்ட யுகத்தின் விளைவுகள் கண்காட்சிக்குரிய நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக எழுத்துமூல ஒப்பந்த மொன்றுக்காக ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றுக்கு வரவேண்டிய போதிலும் அவ்வாறான உடன்படிக்கை யொன்றுக்கு வந்திருக்க வில்லை. | ஒப்பந்தங்களை கையளிக்கும் சந்தர்ப்பங்களில் தவறுதலாக உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை சட்ட விதிகளுக்கு இணங்க ஒப்பந்த உடன்படிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.14.1 பிரிவின் பிரகாரம் குறித்தரைக்கப்பட்ட ஒப்பந்த கால எல்லையை விஞ்சி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அதிகாரத்தினை கொண்டுள்ள நபரொருவரால் அக்காலத்தை நீடிப்பதற்காக அனுமதி வழங்க வேண்டிய போதிலும் நிலையத்தின் தலைமையக கட்டிட நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டிருந்த 270 நாட்களான காலப்பகுதியை | கட்டிட நிர்மாண ஒப்பந்தத்திற்காக 270 நாட்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் கட்டுப்படுத்த முடியாத பல்வேறு காரணங்கள் காரணங்களின் பேரில் காலநீடிப்பு வழங்க நேர்ந்தது. அதன் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலத்தை மிகைத்து நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அது மதியுரை நிறுவன உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை சட்ட விதிகளுக்கு இணங்க அதிகாரமுள்ள நபரொருவரால் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மிகைத்து கால நீடிப்பிற்கு வழங்கிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 113 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 87 ஆக இருந்தது. அதன் பிரகாரம் உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பிடும் போது சிரேஷ்ட, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டத்தின் பதவியணியில் 26 பேருக்கான பற்றாக்குறை காணப்பட்டது. இப்பதவியணி பற்றாக்குறை மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையில் 23 சதவீதமாக இருந்தது. 2018 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட அப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அந்நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு போன்ற பிரிவு செயலற்று போவதற்கு காரணமாக இருந்தது. | கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்கள் மற்றும் வெவ்வேறு காரணங்களினால் வெற்றிட பதவிகளுக்காக திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு முடியாமல் போனது | நிறுவனத்தில் காணப்படும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 23 சதவீத ஊழியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத திட்டம் 2019 பெப்ரவரி மாதம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் 2019 யூலை 01 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத திட்டம் | செயல்நடவடிக்கைத திட்டம் 2019 பெப்ரவரி மாதம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அது யூலை மாதம் திருத்தங்களுடன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டம் முன்னைய ஆண்டில் தயாரிக்கப்பட்டு புதிய ஆண்டு ஆரம்பமாவதற்கு முன்னர் சுற்றறிக்கையின் பிரகாரம் சமர்ப்பித்து உரிய அங்கீகாரத்தை |

| | | |
|---|---|---|
| தாமதமாக திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | | பெற்றுக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வடிவமைப்பு மதியுரையாளர் ஒருவரின் சேவைகளை வழங்கும் நோக்கில் எதிர்பார்த்த வருமானம் ரூபா 500,000 என குறிப்பிடப்பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதி வரை அவ்வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்காக மதியுரை சேவைகளை இலவசமாக வழங்கியமையால் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நிதி முன்னேற்றத்தை பதிவுசெய்ய முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது வெற்றிடமாக இருந்த உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக 2019 யூலை மாதம் ஊழியர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதும் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்காக இன்னுமொரு உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பு செய்து உள்ளகக் கணக்காய்வு பிரிவினை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தில் உள்ளக கணக்காய்வு ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இருப்பதுடன் உள்ளக கணக்காய்வு பிரிவினை தாபித்து அப்பிரிவிற்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு திட்டத்தின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 04 செலவின விடயங்களுக்குரிய உள்ளவாறான செலவினம் மதிப்பிடப்பட்ட செலவினங்களுடன் ஒப்பிடும் போது மதிப்பிடப்பட்ட செலவினங்களை மிகைத்து செலவினம் மேற்கொள்ளப்பட்டமை 23 சதவீதத்திலிருந்து 19 சதவீதம் வரையான வீச்சில் வியாபித்து இருந்தன. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | பாதீட்டின் பிரகாரம் இலக்கிடப்பட்ட வருடாந்த செலவின எல்லைக்குள் கட்டுப்பாட்டுடன் செலவினங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |